2017 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (குறுக்கீடு)

நகராட்சி சட்டமுன்வடிவு இப்போதுதான் வருகிறது. (குறுக்கீடு) இப்போதுதான் வருகிறது. இனிமேல்தான். (குறுக்கீடு) அவசரப்படாதீர்கள். ஒவ்வொன்றாக வரும்.

(இ) தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2017), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 *பிப்ரவரி* 1

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என் கருத்துகளைச் சொல்வதற்கு முக்கியக் காரணம், உள்ளாட்சியில் எனக்கு நினைவு தெரிந்து 1969, 1985 அதைப்போல 1996 என தொடர்ந்து அத்தனைத் தேர்தல்களையும் நான் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். ஆக, இன்றைக்கு இருக்கிற நிலவரத்தில் 6 மாதங்களுக்குள்ளாக இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சட்டத்தின் உட்பிரிவு சட்டம் சொல்லியிருந்தாலும், ***

பிற்பகல் 2—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. எஸ்.ஆர். இராஜா: *இல்லை, ஒரு நிமிடம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் சொல்வதைக் கேளுங்கள், திரு. இராஜா. (குறுக்கீடுகள்) இருங்கள். இந்த ** எல்லாம் இப்போது எதற்கு? நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா? ஆதரிப்பதென்றால், இன்ன காரணத்திற்காக ஆதரிக்கிறேன்; எதிர்ப்பதென்றால், இன்ன காரணத்திற்காக எதிர்க்கிறேன் என்று அதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

@ 30-1-2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு முறை நகர மன்றத் தலைவராக இருந்த காரணத்தினால் சொல்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருக்கட்டும். அதனால்தான் உங்களைப் பேச விட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சட்ட ஷரத்தைச் சொல்லுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் இந்தச் சட்டத் திருத்தத்தை, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? அதை மட்டும் சொல்லுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் பேச நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் அவைக் குறிப்புக்கு வராது. நீங்கள் பேசிய அத்தனையையும் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கிறீர்களா? எதிர்க்கிறீர்களா? அதைமட்டும் சொல்லுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *நான் சொல்வது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்) காரணத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆஸ்டின், உங்களைவிட எனக்குக் கொஞ்சம் விவரம் கூட தெரியும். நீங்கள் எனக்குப் பாடம் சொல்லாதீர்கள். நான் சொல்வதை மட்டும் நீங்கள் செய்யுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *அங்கு மக்கள் பிரதிநிதிகளும் இல்லை. அரசு அதிகாரிகளும் இல்லை. ஆகவேதான், இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று உங்கள் மூலமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை மட்டும் சொல்லுங்கள்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

திரு. எஸ்.ஆர். இராஜா: ஆகவே, உடனடியாக உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும். இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் கண்டிப்பாக எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் தள்ளிப்போய்க் கொண்டிருக்கின்றன. அது 6 மாதத்திற்குள் நடைபெற வேண்டும். இல்லையென்றால் அரசமைப்புச் சட்டத்தின் கூறுகளின்படி ஒரு constitutional crisis தமிழகத்தில் ஏற்படும் என்பது நாம் அறிந்த ஒன்று. மத்தியிலிருந்து நிதிப் பகிர்வுகள் கிடைப்பதில் சிரமங்கள் ஏற்படும். ஆனால், அதேநேரம் அதற்குண்டான மாற்று ஏற்பாடாக தமிழக அரசு என்ன செய்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். நாம் தேர்தலை தள்ளிக்கொண்டே போனால் ஒரு மாற்று ஏற்பாடு நம்மிடம் இருக்க வேண்டும். அந்த மாற்று ஏற்பாடு என்ன என்பதை அரசு விளக்க வேண்டும்.

இரண்டாவது, இந்தத் தேர்தல்கள் நடைபெறும்பொழுது ஒரு முக்கியமான சீர்திருத்தம், காங்கிரஸ் கட்சியின் தரப்பில் நாங்கள் என்ன விரும்புகிறோமென்றால், கால அவகாசம் சரியாகத் தரப்பட வேண்டும். அதை நீங்கள் இந்த முறை கண்காணிப்பீர்கள் என்று கருதுகிறேன். ஆனால், அதே நேரம் இந்தமுறை Electronic Voting Machine–ஐ அறிமுகப்படுத்துவது என்பது ஒரு முக்கியமான கடமை என்று கருதுகிறேன். இதை மாநில தேர்தல் ஆணையம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஊராட்சிகளுக்குக் கொண்டு வருவதில் சிரமம் இருக்கும். ஆனால், அதேநேரம் பேரூராட்சிகள், ஊராட்சி மன்றம் மற்றும் மாவட்ட கவுன்சிலர்கள் போன்ற பதவிகளுக்கெல்லாம் நிச்சயமாக EVM–ஐப் பயன்படுத்தலாம். அது ஆரோக்கியமான நடைமுறையாக இருக்கும். சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை, ஆங்காங்கு நடக்கக்கூடிய கைகலப்பு போன்றவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கு இது ஒரு நல்ல விஷயமாக இருக்கும். எனவே, காங்கிரஸ் கட்சியின் தரப்பில் நாங்கள் இதை வலியுறுத்துகிறோம். விரைவில் இந்த உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும். இல்லையென்றால், நிதிப் பகிர்வுகளுக்கான மாற்று ஏற்பாடாக அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதை விளக்க வேண்டும். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், பேசுகிறீர்களா? (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கொறடா அவர்கள் கேட்டதற்குச் சொன்ன அதே பதில்தான். இருந்தாலுங்கூட, இப்போது உள்ளாட்சிகளிலே ** இல்லை என்று சொல்லியிருந்தார். அதேபோல, பல வேலைகள் நடக்கவில்லை என்று சொன்னார். வர்தா புயல் வந்தபோது எடுக்கப்பட்ட நடவடிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் போய், அதேபோல் ஒவ்வொரு அமைச்சரும் நேரில் போய், உயர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் நேரில் போய், எல்லாப் பக்கமும் சிறப்பான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதை எல்லோரும் பாராட்டினார்கள். அதேபோல, எல்லா ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் எல்லாப் பக்கமும் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தேவையான அலுவலர்கள் இருக்கின்றார்கள்.*

பிற்பகல் 2—30

அதுமட்டுமல்ல, நீங்கள் அன்றைக்கு நீதிமன்றத்திற்குச் செல்லாமல் இருந்திருந்தால், இன்றைக்கு உள்ளாட்சித் தேர்தல் முழுமையாக நடைபெற்று, அனைத்து மேயர்களும் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் பதவி ஏற்றிருப்பார்கள். இது நாட்டு மக்களுக்கும் தெரியும்.

நான் மீண்டும் சொல்கிறேன். 1996, 2001, 2011 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து நீங்கள் என்ன நடைமுறையைப் பின்பற்றி வந்தீர்களோ அதே நடைமுறைதான் எல்லாவற்றிலும் பின்பற்றப்படுகின்றது. அதைத்தான் நாங்கள் நீதிமன்றத்திலும் சொல்லியிருக்கிறோம். எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[பேரவைத் தலைவர்] [2017 பிப்ரவரி 1

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2017) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஈ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2017), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2017)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 30–1–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.